இருக்கிறது என்றாலும் அதைப் போன்ற இன்னொரு மருத்துவமனையைத் தமிழகத்தில் திருச்சி அல்லது மதுரை போன்ற இடத்தில் அமைக்க ஏதாவது குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை. தற்சமயம் இல்லை என்றால் எதிர் காலத்தில் வரக்கூடும் என்பதற்காகத்தான் தற்சமயம் இல்லை என்று சொன்னேன்.

தேவகோட்டை, கண்ணன்குடி ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

202—(*வினா எண். 9280) திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தேவ கோட்டை ஒன்றியம், கண்ணன்குடி ஒன்றியம் ஆகியவைகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேவகோட்டை ஒன்றியத்தில், திருவேகம்பட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், கண்ணன்குடி ஒன்றியத்தில் அமைந் தான்குடியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. தேவகோட்டை ஒன்றியம், கண்ணன்குடி ஒன்றியம் ஆகியவைகளில் மேலும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவும் செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1987 மார்ச் 27]

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் திருவேகம்பட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. ஆனால் அது மாவட்டப் பிரிவினையில் இராமநாதபுரம் மாவட்டத் தோடு சேர்ந்து இருக்கிறது. தற்சமயம் அது தேவகோட்டை ஒன்றியத்தோடு சேர்க்கப்படவில்லை. எனவே தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல் இருக்கிறது. அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்றும் அதேபோல கண்ணன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கண்ணன்குடியில்தான் ஆஸ்பத்திரி இருக்கிறது. 15, 20 மைல் சுற்றளவில் வேறு எந்த ஆஸ்பத்திரியும் கிடையாது. எனவே அதையும் மறு பரிசீலனை செய்து அங்கேயும் ஆஸ்பத்திரி அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு என்று சில அடிப்படை விதிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று வைத் திருக்கிறோம். 30 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட இடத்தில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கேட்பவர்கள் பத்தாயிரம் ரூபாயும், 5 ஏக்கர் பூமியும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று விதி வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு—150 என்று நினைக்கிறேன்—150 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் துவக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித் திருக்கிறார்கள். அது எங்கெங்கே துவக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி கருத்துரு பரிசீலிக்கும்போது அதுவும் பரிசீ லிக்கப்படும்.

திரு. கா. சொர்ணலிங்கம்: தலைவர் அவர்களே, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திலேயும் வேலாயுதப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்திலேயும் திருவேகம்பட்டு பகுதியில் உள்ள முப்பேரி ஊராட்சி ஒன்றியத்திலேயும் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அது விரைவில் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 27

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல இடங்களில் கேட்டிருக்கிறார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல. எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கலாம் என்பதைப் பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. அதாவது இடத்தைப் பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை. அதை எடுக்கும்போது இவைகளையெல்லாம் பரிசீலிக்கலாம்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய இலக்கணத்திற்கு ஏற்ப பல இடங்களில் முப்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருந்து, அதேபோல 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாய் வரையில் கொடுத்திருக்கிறார்கள் என்று செய்தி இருக்கிறது. நான் என்னுடைய தொகுதியைப் பற்றி கூறியிருக்கிறேன். இதுவரையில் அந்தப் பகுதிகளில் ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்கப் படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அது போல் ஒன்றல்ல, பல இடங்களில் இப்படி 10 ஆயிரம் ரூபாய் பணமும் கொடுத்து 5 ஏக்கர் நிலமும் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் 150 இடங்களில் 150 நிலையங்கள் திறக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 10, 15 இடங்களில்தான் திறந்து வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு 150 என்று வைத்திருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தக் குறை நீங்கும் என்று நான் கருதுகிறேன்.

திருமங்கலம் தொகுதி கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தல்.

203—(*வினா எண் 11252) **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள மேல ஹப்பனூர், கப்பலூர் ஆகிய ஊர்களில் உள்ள கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?